View metadata, citation and similar papers at core.ac.uk
brought to you by CORE
provided by International Research Journal of Tamil

RESEARCH ARTIC

IOR PRESS
INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்



DOI: 10.34256/irjt1

# நிகழ்த்துக்கலைகளில் பாவைக்கூத்து

**நா.தீபா சரவணன்** [அ,*]

[அ] தமிழ்த்துறை, ஸ்ரீ இராமகிருஷ்ணா மகளிர் கலை அறிவியல் கல்லூரி, கோவை - 641044, தமிழ்நாடு, இந்தியா.

# Paavaikkuutthu in Performing arts

**N. Deepa Saravanan** [a,*]

[a] Department of Tamil, Sri Ramakrishna College of Arts and Science for Women Tamil Nadu 641044, India

Received : 11-08-2019
Accepted : 08-10-2019

**ABSTRACT**

'Paavaikkuutthu in Performing arts'

Kuutthu one among the various folk arts. 'Thol paavaikkuutthu' is one, which is at the verge of extinction in the modern era of development. People who did not have any other outlet for entertainment, along with nurturing the ancient Tamil tradition gave life to many new art forms. 'Thol paavaikkuutthu', which was popular in Tamilnadu and other States as well is highlighted in this article.

**Keywords:** Paavsikkuutthu, Tamilnadu, Tamil tradition

## முன்னுரை

நாட்டுப்புறக்கலைகள் பலவற்றில் கூத்து என்பதும் ஒன்று. நாகரிக வளர்ச்சியில் அழிந்து கொண்டிருக்கும் பல கலைகளுள் தோல்பாவைக் கூத்தும் ஒன்று. பொழுது போக்க வேறு வடிகால் இல்லாத மக்கள் நம் பழந்தமிழரின் மரபை பேணிக்காத்ததோடு புதுப்புது கலைகளுக்கு உயிரூட்டமும் நல்கி வந்தனர். பொழுதை பல வழிகளில் கழித்துக்கொண்டிருக்கும் நாம் பழங்கலைகள் பலவற்றை இழந்து வருகிறோம். தமிழகத்திலும் பிற மாநிலங்களிலும் பிரபலமாக இருந்து வந்த தோல்பாவைக் கூத்து குறித்து இக்கட்டுரையில் எடுத்தியம்பப்படுகிறது.

**கூத்து**

'கூத்தர் என்ற சொல்லைப் பழந்தமிழ் இலக்கியங்களில் காணலாம். நாட்டுப்புறக்கலையாக விளங்கும் கூத்தின் வளர்ச்சியே நாடகமாகும். சங்ககாலத்தில் குரவைக்கூத்து பெருவழக்காக வழங்கிவந்தது. இதன் கிளையாகவே 'ஆய்ச்சியர் குரவை,

'குன்றக்குரவை' போன்றவை திகழ்கின்றன என்கிறார் சண்முக சுந்தரம் நாட்டுப்புற இயல் என்ற நூலில். (சு.சண்முக சுந்தரம்- நாட்டுப்புறஇயல்.,ப.107) சிலப்பதிகாரத்தில் பதினொரு வகைக் கூத்துக்களைப்பற்றி குறிப்பிடப்பட்டுள்ளார் ஆசிரியர்.

கூத்துக்களை நிகழ்த்தும் கலைஞர்களைக் 'கூத்தாடிகள் என்பர். "கூத்தாடி கிழக்கே பார்ப்பான்: கூலிக்காரன் மேற்கே பார்ப்பான் எனும் பழமொழி சமூகத்தில் நிலவில் உள்ளது. இதனால் கூத்துகள் விடியும் வரை நிகழ்த்தப்படும் என்பது புலனாகிறது.

## பாவைக்கூத்து

"கதையாடலுக்கும் நாடகம் நிகழ்த்துதலுக்கும் பொருள்களைப் பயன்படுத்தும் பண்பாட்டு மரபுகளுள் மிகவும் பழமையானது பாவைக்கூத்தாகும்" என்கிறார் தே.லூர்து, நாட்டார் வழக்காற்றியல் சில அடிப்படைகள் என்ற நூலில். (தே.லூர்து, நாட்டார் வழக்காற்றியல் சில அடிப்படைகள்., ப.354)

பாவை என்ற சொல் பொம்மையைக் குறிக்கும். பொம்மைகளை 1.தோல் பொம்மைகள், 2.மரப்பொம்மைகள் என இரண்டாகப் பிரிப்பர். இவைகளை வைத்து நிகழ்த்தப்படும் கலையே 'பாவைக்கூத்து' என்கின்றனர்.

பாவைக்கூத்தின் சிறப்பை விளக்குமிடத்து தே.லூர்து "பாவைக்கூத்து என்பது தனித்தன்மை வாய்ந்த ஒரு கருத்தைப் புலப்படுத்தும் நிகழ்த்துக்கலையாகும். நிகழ்த்துனனும் பார்வையாளனும் ஓரிடத்தில் ஒரு காலப்பின்னணியில் ஒருங்கிணைந்திருக்கும்போதே நிகழ்த்துதல் நடத்தப்படும் என விளக்குகிறார். (தே.லூர்து, நாட்டார் வழக்காற்றியல் சில அடிப்படைகள்., ப.354)

தோல்பாவைக்கூத்து அல்லது பாவைக்கூத்து என்பது உயிரற்ற பாவைகளை உயிருள்ள பாத்திரங்களைப் போல் இயக்கி நிகழ்த்தப்படும் ஒரு கூத்து ஆகும். இக்கலை தோல்பாவைக்கூத்து, தோல்பாவை நிழல்கூத்து, நிழலாட்டம், தோல்பொம்மலாட்டம் என வெவ்வேறு பெயர்களிலும் அழைக்கப்படுகிறது. இக்கலையானது இந்தியாவில் ஆந்திரா, கர்நாடகம், கேரளம், ஒரிசா தமிழ்நாடு ஆகிய மாநிலங்களில் நிகழ்த்தப்படுகிறது.

## பாவைக்கூத்தின் தோற்றம்

பாவைக்கூத்து சீனாவில் தோன்றியது என்றும் இந்தியாவில் தோன்றியது என்றும் இரண்டு கருத்துக்கள் நிலவுகின்றன. கி.மு 120ல் நடந்ததாக ஒரு கதை இதனை விளக்குகிறது. 'வுதி என்ற ஜீன் வம்சத்து அரசன் தனது ஆசைநாயகி வாங் இறந்த சோகத்தில் புலம்பிக்கிடக்க, அவனை சோகத்திலிருந்து மீட்டு மகிழ்விக்க ஸ்சியாங் என்பவர் வாங்-கின் ஆவியை வரவழைக்கிறேன் என்று சொல்லி சக்கரவர்த்தி வுதியை ஒரு திரையின் முன்னால் அமர்த்தி திரையில் வாங்கை தோன்றச்செய்து ஒவ்வொரு இரவும் வுதியுடன் சல்லாப சம்பாஷணைகளில் ஆழ்த்தி மகிழ்வித்தான் என்பதுதான் கதை. பதிவான ஆதாரம் எனப்பார்க்கும்போது 'தான் –ஸீ' என்ற கலைக்களஞ்சியத்தில் ஸீங் வம்ச அரசனான ஜோங்ட்ஸீங் (1023-1065) காலத்தில்தான் அது

தோன்றியிருக்க வேண்டும் என்பது தெரிகிறது" என்கிறார் வெங்கடசாமிநாதன் பாவைக்கூத்து என்ற நூலில்.

மேலும் இந்தியாவில் தோன்றியது என்பதற்கு 'ஆர்-பிஸ்ச்சல் என்னும் ஜெர்மானிய ஆராய்ச்சியாளர் 'இந்திய தோற்பாவைக்கூத்து என்னும் தன் ஆராய்ச்சிக் கட்டுரையில் சோட்டா நாக்பூர் பிரதேசத்தில் உள்ள காம்கர் மலையில் சீத பெங்கா குகையில், தான் கண்ட தோற்பாவைக்கூத்து அரங்கத்தைப்பற்றி சர்ச்சித்துள்ளார் என்ற கருத்தையும் வெங்கடசாமிநாதன் கூறுகின்றார். (வெங்கடசாமிநாதன் –பாவைக்கூத்து., ப.29,30)

## இலக்கியச்சான்றுகள்

தமிழ் இலக்கியங்களிலும் பாவைக்கூத்து இருந்ததற்கானச் சான்றுக்ள உள்ளன. மாணிக்கவாசகர் திருவாசகத்தில்

"சீலமின்றி நோன்பின்றிச்

செறிவே இன்றி அறிவின்றித்

தோலின் பாவைக்கூத்தாட்டாய்க்

கழன்று விழுந்து கிடப்பேனை" (திருவாசகம் ஆனந்தமாலை-3) என்று குறிப்பிடுகிறார்.

சங்க இலக்கியங்களிலும் கூத்து தொடர்பான பல சொற்கள் கையாளப்பட்டுள்ளது. சான்றாக - நெடுநல்வாடையில் கூத்து என்ற சொல்லை குறிக்க 'ஆடல்' என்ற சொல் இடம்பெற்றுள்ளதை "ஆடுகளப்பறையின் அரிப்பன ஒலிப்ப" (நெடுநல்வாடை-67வது வரி) எனக்குறிப்பிட்டிருப்பதைக் கூறலாம். மேலும் அகநானூறு

"இரப்பாரையில்லாயினீர்ங்கண் மாஞாலம்

மரப்பாவை சென்று வந்தற்று" (அகநானூறு 45-2) எனக்குறிக்கிறது. இச்சான்றுகள் பழந்தமிழ்நாட்டில் பாவைக்கூத்து நிகழ்ந்தமைக்கு சான்றுகளாகின்றன.

## பிற இடங்களில் பாவைக்கூத்து

பாவைக்கூத்து இந்தியா தவிர சீனா, ஜப்பான் போன்ற நாடுகளிலும் நிகழ்த்தப்பட்டு வருகின்றன. "ஒரிஸா போன்ற மாநிலங்களில் இவை சிறுதெய்வ வழிபாட்டுடன் கலந்தும். சமயச்சடங்காகவும் தொடர்ந்து நடைபெற்று வருகிறது என்கிறார் வெங்கட்சாமிநாதன்.( வெங்கடசாமிநாதன்-பாவைக்கூத்து., ப.33)

இந்தியாவிலும் பல பகுதிகளிலும் பலபெயர்களில் இப்பாவைக்கூத்தை குறிக்கின்றனர். ஆந்திராவில் இக்கூத்தை 'தோலு பொம்மலாடா' என்றும் சென்னையில் 'தோல் பொம்மலாட்டம்' என்றும், மைசூரில் 'தொகலுபொம்பே ஆடா' என்றும்

கேரளாவில் ‘பாவக்களி’ அல்லது ‘நிழலாட்டம்’ என்றும் ஒரிசாவில் ‘ராவன்சாயா’ என்றும் மகாராஷ்டிராவில் ‘சர்மபகுலி நாட்யா’ என்றும் வழங்குவர்.

கேரளாவில் ‘ஓலப்பாவைக் கூத்து’ எனவும் குறிக்கப்படுகிறது. முக்காலத்தில் கரும்பனை ஓலையில் பாவை தயாரித்து, அதன் மூலம் இக்கூத்து நடத்திவர அதனால் அப்பெயர் பெற்றது. தற்போது மான்தோலால் பாவை செய்யப்பட்ட பொழுதும் அப்பெயரே வழக்கத்தில் உள்ளது என்பது கள ஆய்வில் திரட்டப்பட்ட செய்தியாகும்.

## பாவைக்கூத்தின் சில நம்பிக்கைகள்

கேரளாவில் பாவைக்கூத்து கெட்ட ஆவிகளிடமிருந்தும் தீய சக்திகளிடமிருந்தும் மக்களைக் காப்பாற்றும் சக்தியாக நம்பப்படுகிறது. “திருவிழாக்களில் இராமயணக்கதை பாவைக்கூத்தாக நடத்தப்படுவதால் மக்கள் செய்த பாவங்கள் நீங்கும் என்றும், செல்வம் பெருகும் என்றும் நம்பப்படுகிறது எனக் குறிக்கிறது மலையாளப் பத்திரிகைச் செய்தியொன்று (மலையாள மனோரமா நாளிதழ் 2003 ஆகஸ்ட் 21)

“கர்நாடகாவில் நோயாளி தோற்பாவைகள் வைத்துள்ள பெட்டியை தூங்குகையில் அருகாமையில் வைத்தால் நோய் குணமாகும் என்று நம்புகின்றனர். மேலும் நோய்வராமல் இருக்க இறைவனுக்குக் கொடுக்கும் காணிக்கையாகவும் பாவையாட்டிகளுகக்குத் தோல்களை மக்கள் கொடுக்கின்றனர்” (மு.இராமசாமி-தோற்பாவை நிழற்கூத்து., ப.10) என்கிறார் இராமசாமி.

## கேரளாவில் பாவைக்கூத்து

கேரளாவில் சில பகவதிகோயில்களில் பாவைக்கூத்து நடத்தப்படுகிறது. கேரளத்தில் தோற்பாவை கூத்து நிகழ்த்தப்படுவதற்கான விளக்கங்கள் சில. இவை குறித்து பாவைக்கூத்து என்ற நூலில் தெளிவாக விளக்குகிறார் வெங்கட்சாமிநாதன்.

“ஒரு சில ஆண்டுகளுக்கு முன்பு பாலக்காட்டை ஆண்டு வந்த அரசன், தன் நம்பூதிரிகளிடம் கோபம் கொள்ள அப்போது அரசவையில் அரசனின் நண்பனாக இருந்த மலையாள ஆதிகவி துஞ்சத்து எழுத்தச்சன் தஞ்சையிலிருந்து சில தமிழ் பிராமணர்களை அழைத்து வந்தாராம். கங்கையாடிப்பட்டர், சோமையாஜிபட்டர் என்னும் அந்த அந்தணர்கள் உதவியால்தான் கம்பராமாயணம் பாவைக்கூத்தின் ஆடற்பற்றாகத் தயாரிக்கப்பட்டது. கம்பர் பாடல்களைப் பாடுவதும், வியாக்கியானம் செய்வதுமான பொறுப்பை இவ்வந்தணர்கள் ஏற்க இவர்களுடன் சென்ற செட்டியார்கள், முதலியார்கள் பாவையாட்டிகளாயினர். (வெங்கட்சாமிநாதன் - பாவைக்கூத்து., ப.36,37)

இவ்வந்தணர்களைச் சிறப்பிக்கும் முறையில் பிராமண கதாபாத்திரங்களை முதலில் அறிமுகம் செய்து, அவைகளை 'பட்டர் பாவைகள்' என்று குறிக்கின்றனர்.

## முடிவுரை

இவ்வாறு கலைகளால் இதிகாசங்களை பாமர மக்களுக்கும் சென்று சேரும் வண்ணம் நிகழ்த்தப்பட்ட பாவைக்கூத்து என்ற கலையை தற்போது நிகழ்த்துபவர்கள் அரிதாகிவிட்டனர். கூத்துக்கலைஞர்கள் தங்களோடு இக்கலை அழிந்துவிடும் என்று வருத்தப்படுமளவிற்கு இன்று இக்கலையை பார்ப்பவர்கள் எவருமில்லை. கோயில் திருவிழாவோடு இக்கலை தொடர்புடையதால் கடவுள் குற்றத்திற்கு ஆளாகக்கூடாது என இன்றும் சில இடங்களில் நடத்தப்படுகிறது. பார்வையாளர்கள் யாருமில்லையெனிலும் விடிய விடிய கூத்து நிகழ்த்தப்படுகிறது. கேரளா பாலக்காடு மாவட்டத்திலுள்ள நல்லேப்பிள்ளி என்ற கிராமத்தில் இப்பாவைக்கூத்து இன்றும் கோயில் திருவிழாவோடு தொடர்புடையதாக நிகழ்த்தப்பட்டு பாதுகாக்கப்படுகிறது.

## அடிக்குறிப்புகள்


[1] அகநானூறு - களிற்றியானை நிரை, சென்னை-1987..

[2] நாட்டுப்புற இயல் - சண்முக சுந்தரம், மணிவாசகர் பதிப்பகம் 1994.

[3] நெடுநல்வாடை, சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம் 2001

[4] பாவைக்கூத்து - வெங்கட்சாமிநாதன், 1985.

[5] மலையாள மனோரமா நாளிதழ் 2003 ஆகஸ்ட் 21

[6] கள ஆய்வில் திர்ட்டப்பட்ட செய்திகள்.


## References


[1] Akananuru - Kalitaiyana Nirai, Chennai-1987.

[2] Folklore - Shanmukha Sundaram, Maniwasagar Publishing 1994

[3] Nedunal Vaadai, Saiva Siddhanta University Press 2001

[4] Paavaikkuthu - Venkatsaminathan, 1985.

[5] Malayala Manorama daily 21 August 2003

[6] News gathered in the field survey.



**Funding:** NIL

**Acknowledgement:** NIL

**Conflict of Interest:** NIL

## About the License:

Attribution 4.0 International (CC BY 4.0)

The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License